IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

சங்க இலக்கியத்தில் ஓதலாந்தையாரின் கவிதை மொழி

சி. காயத்ரி*, முனைவர் கு. முத்துக்குமார்**

*முனைவர் பட்ட ஆய்வாளர், **உதவிப் பேராசிரியர்,

தமிழ்த் துறை,

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி),

கோயம்புத்தூர் – 641 029

Abstract in Research Paper

The Sangam Poet Othalanthaiyar has sung songs only in the Akathinai tradition. There are 3 songs in kurunthokai (12,21, 329) and 100 songs in AinKurunooru (301 – 400) totaling to 103 Palaithinai Songs. Through these Poems, an attempt will be made to look at his poetic language in three ways, especially the language of Akathinai songs, the yappu and the Pa. Through this review article on the poetic language of Othalantaiyar, we can understand the way in which the Yappu structure and the subject structure are combined with the language structure of the Poet's time. Further, this research paper will explore the relationship between the Yappu, from and content of the Akathinai Poems Sung by this Poet.

Keywords

Poetic language – Yappu - Pa

1.1 முன்னுரை

சங்க இலக்கியப் புலவரான ஓதலாந்தையார் பாடிய பாடல்களின் வழி அவர் காலத்துச் சமூக மொழியையும் தொல் வழக்குகளையும் அறிய முடியும். கவிதை மொழியின் சிறப்பு குறித்து, "சில இலக்கணக்கூறுகள் கவிதையில் கெட்டிருப்பது கவிதைக்குச் செறிவைக் கொடுத்து சில குறிப்புப் பொருளையும் பெற வைக்கிறது. அவை பாட்டில் இடைவெளி இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துகின்றன. பொதுவாகப் பாட்டுக்குள் இருக்கும் சில குறிப்புகள் மொழி அறிவு, உலக அறிவு ஆகியவைகளால் புலவர் சொல்ல விரும்பிய முழு கருத்தையும் உணர்ந்து கொண்டு வாசகர்கள் ரசிக்கிறார்கள். எனவே ஒலிநிலை, சொல்நிலை, தொடர்நிலை என்று மொழியியல் நிலையிலும், சீர் வகையுளி, அடிவகையுளி என்று யாப்பு நிலையிலும் பாட்டை நுண்மையாகப் பார்த்தால் கவிதையின் பொருள் ஆழ அகலங்களை உணர்ந்து கொள்ள முடியும்" என்று செ.வை. சண்முகம் **(செ.வை.சண்முகம், கவிதைக் கட்டமைப்பு, 2013)** குறிப்பிடுகின்றார். ஐங்குறுநூறு, குறுந்தொகை ஆகியவற்றில் ஓதலாந்தையார் பாடிய அகத்திணைப் பாடல்களைக் கவிதை மொழி, யாப்பு, பா ஆகிய மூன்று பரிமாணங்களில் அறிவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது

1.2 மொழி

மொழி என்பது அடிப்படையில் பேச்சையும் கருத்துப் பரிமாற்றத்தையும் குறிக்கும். எனவே மொழியின் அடிப்படை அலகு கிளவி (Utterance) எனப்படும். மொழியானது ஒரு சொல்லாகவும், தொடராகவும் பல தொடர்கள் சேர்ந்ததாகவும் இருப்பது ஆகும்.

மொழி பொதுநிலையில் (பேச்சு மொழி, எழுத்து மொழி) இருந்தாலும் இலக்கியப் படைப்பில் பயன்படுத்தப்படும் மொழியும், இயல்பான உரையாடலில் பயன்படுத்தப்படும் மொழியும் வேறுபட்டு அமைகின்றது. உரைநடையில் பயன்படுத்தப்படும் மொழி கவிதைகளிலும் பயன்படுத்தப்படுகின்றது. இருப்பினும் உரைநடை மொழியிலிருந்து கவிதை மொழி வேறுபட்டு அமைகின்றது. காரணம், கவிதைகளில் அமைக்கப்படுகின்ற தொடரியல் நிலைகள் கவிதைக்கான அழகியல் கூறுகளுடன் இருக்கின்றன.

கவிதை மொழியின் சிறப்பு என்பது பேச்சு மொழியில் காணப்படும் பண்புகளைத் திட்டமிட்டு எழுத்து மொழியில் ஆக்கப்படுவது என்று குறிப்பிடலாம்.

1.3 கவிதை மொழி

கவிதை மொழியின் சிறப்பு கவிஞன் சொல்ல வேண்டிய எல்லாச் செய்திகளையும் பாடலில் சொல்வதில்லை. அதைப் பொருள் இடைவெளி (Semantic gap) என்று கூறுவார்கள். கவிதையில் உள்ள சொற்களின் ஆற்றலாலும் (சொல்லாற்றல்) தொடர்களின் ஆற்றலாலும் (தொடர் ஆற்றலால்) அது நிரப்பப்படுகிறது.

சொல்லாற்றல் என்பது ஒரு சொல் தன்னுடைய நேர்ப் பொருளோடு இன்னும் சில பொருளையும் உள்ளடக்கியிருக்கும். அந்தப் பொருளைச் சூழலுக்குத் தகுந்தபடி உணர்ந்து கொள்ள வேண்டும்.

1.3.1 பொருண்மையியல்

தொல்காப்பியர் சொற்கள் பொருள் உணர்த்தும் முறையை, '**தெரிபு வேறு நிலையல்**' நேர்ப்பொருள், '**குறிப்பில் தோன்றுதல்**' குறிப்புப் பொருள் (**தொல். சொல். 157**) என்று இரண்டு வகைப்படுத்துகிறார். குறிப்புப்பொருள் பேச்சு மொழியில் ஆகுபெயராகவும் உருவகமாகவும், இலக்கிய மொழியில் உள்ளுறையாகவும் இறைச்சியாகவும் வருவதைத் தொல்காப்பியர் குறிப்பிட்டிருக்கின்றார். கவிதையில் வண்ணம் (ஒலிநயம்), செய்யுள் விகாரம், மொழிபுணர் இயல்பு (முன்னிறுத்தம், சொல் கெடல் போன்றவை) ஆகியவை மூலம் குறிப்புப் பொருள் இருப்பது குறிப்பிடப்படுகின்றது.

பொருண்மையியலில் உள்சொற்கள் (Hyponyms), மீச்சொல் (Superordinate term) என்ற கருத்து மொழியியலாளரால் குறிப்பிடப்படுகின்றது. சான்றாக,

வேய்வனப்பு இழந்த தோளும் வெயில்தெற

ஆய்கவின் தொலைந்த நுதலும் (ஐங். 392)

இத்தொடரில் இழத்தலும் தொலைதலும் வேறுபட்ட வினைகள். அவைகளுக்கு உரிய பெயர்ச்சொற்கள் வேறு வேறு வேற்றுமை ஏற்று வந்தாலும் உம்மை ஏற்று வந்துள்ளன. இச்சொற்களைப் பயன்படாமை என்ற மீச்சொல்லின் உட்சொற்களாக - வேய் வனப்பு இழந்த தோல், ஆய் கவின் தொலைந்த நுதல் ஆகியவை தக்க காலத்தில் தலைவிக்குப் பயன்பாட்டுக்கு இல்லாமல் இருத்தலைக் கருதும்போது உம்மை ஏற்றது பொருந்தி விடுகிறது.

மீச்சொல்லாக்கமும், அதன் உள்சொற்களும் கருத்தாடல் ஆய்வில் பொருண்மையியல் நோக்கில் ஒருவகை பொதுமைப்படுத்தலாகக் குறிப்பிட முடியும். முரண் அமையும் போது பொதுமைப்படுத்திப் பார்ப்பதற்கு மீச்சொல்லாக்கம், உள்சொற்கள் என்ற கருத்தமைவுகள் பெரிதும் பயன்படும்.

1.3.2 தொடரியல்

வாக்கியத்தில் மொழி முதல் நிலைகளின் வரிசை முறை மாறி வருவதைத் தொல்காப்பியம் '**மொழிபுணர் இயல்பு' (தொல். சொல். எச்சம். 8)** என்று குறிப்பிட்டு வகைப்படுத்தியிருக்கின்றது. கவிதையை அன்வயப்படுத்திப் பொருள் கொள்கிற முறை பொருள்கோள் ஆய்வு ஆகும். பாட்டின் திரள் பொருளைப் புரிந்து கொள்ள இவ்வாய்வு பயன்படும். இன்று மொழியியலில் ஏற்பட்ட வளர்ச்சியால் ஒவ்வொரு வாக்கியமும் புதைநிலை அமைப்பும், புறநிலை அமைப்பும் உடையது என்றும், புதைநிலை அமைப்பு புறநிலை அமைப்புகள் மாறும்போது வரிசை மாற்றம் மட்டும் இல்லாமல் சொற்கள் கெடுதல், சொற்கள் சேர்தல் ஆகிய மாற்றங்களைப் பெறும். புறநிலை அமைப்பு இலக்கிய ஆய்வில் நடை மாற்றமாகக் கருதப்பட்டு பேசுபவனுடைய உள்ளக் கிடையை அல்லது புலவன் அழுத்தம் கொடுப்பதை அல்லது அழுத்தம் கொடுக்காததை உணர்த்துவதாக விளக்கப்படுகின்றது. அதனால் கவிதை மொழியின் தொடரியல் ஆய்வு மாற்றிலக்கண மொழியியல் நோக்கில் முக்கியத்துவம் பெற்று வருகின்றது.

1.4 பாலைத் திணை

தொல்காப்பியர் பாலைத் திணையை அகத்திணை ஏழினுள் ஒன்று எனக் குறிப்பிடுவார்.

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்

முற்படக் கிளந்த எழுதிணை என்ப" (தொல். பொருள். அகத்.1)

"அவற்றுள்

நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்

படுதிரை வையம் பாத்திய பண்பே" (தொல். பொருள். அகத். 2)

என்னும் தொல்காப்பிய நூற்பா நடுவண் திணை என்று பாலைத் திணையைக் குறிப்பிடுகின்றது. நடுவண் திணையாகிய பாலைத் திணை ஒழிந்த ஏனைய முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய திணைகளுக்கு நிலம் உள்ளது. பாலைக்கு என்று தனி நிலம் இல்லை என்பது இந்நூற்பாவின் கருத்து. பாலைக் கலிக்கு விளக்கம் கூறும் நச்சினார்க்கினியர், "பாலைக்கு நிலம் இன்று எனின் அற்றன்று" என்று கூறி அகத்திணை எல்லா நிலத்தும் பயின்று வரும் ஆதலின் நிலம்

உண்டாயிற்று என்பர். அடுத்து மதுரைக்காஞ்சிக்கு உரையெழுதும் நச்சினார்க்கினியர், "ஐம்பாற்றிணையும் கவினி" என்னும் பாடலடிக்குப் (மது. 325, 326) "பாண்டிய மண்டலத்தின் கண்ணே ஐந்து கூற்றினை உடைய நிலங்களும் அழகு பெற்று" என்று உரை வகுக்கிறார்.

பாலைக்கு நிலம் தனித்து இல்லை எனத் தொல்காப்பியர் கூறிய பிறகு சிலப்பதிகாரம் பாலைக்கு நிலம் இருப்பதை வரையறுக்கின்றது.

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து

நல்லியல் பழிந்து நடுங்குதுய ருறுத்துப்

பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்". (சிலம்பு. நாடு. 64 – 66)

முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் மழை இன்றி வறண்டு தனது தன்மையில் வேறுபட்டு நல்ல இயல்புகளும் கெட்டுப் பிறர் நடுங்குமாறு துயரத்தை வெளிப்படுத்தும் பாலை என்பதாக மாறும் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

தொல்காப்பியர் பாலைத்திணைக்குரிய பெரும்பொழுது, சிறுபொழுது குறித்து வரையறுக்கின்றார்.

"நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு

முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே"

(தொல்.பொருள்.அகத்.11)

"பின்பனி தானும் உரித்தென மொழிப" (தொல்.பொருள்.அகத்.12)

இவ்விரண்டு நூற்பாக்களும் பாலைத்திணைக்குரிய பொழுதுகளை வரையறை செய்கின்றன. இவற்றின்படி இளவேனில், முதுவேனில் இவற்றோடு பின்பனிக் காலமும் பாலைக்குரிய பெரும்பொழுதுகள், பகற்பொழுதின் நடுக்கூறாகிய நண்பகற் பொழுது சிறு பொழுது ஆகும்.

ஐந்திணைகளுக்குரிய கருப்பொருட்கள் குறித்து, **"தெய்வம் உணாவே மா மரம் புட் பறை" (தொல். பொருள். அகத். 20)** என்னும் தொல்காப்பிய நூற்பா குறிப்பிடுகின்றது. பாலைக்குரிய தனித்த கருப்பொருட்களை உரையாசிரியர்களின் வழி அறிய முடிகின்றது.

1. தெய்வம் - கொற்றவை

2. மக்கள் – விடலை, காளை, மீளி, எயிற்றி, எயினர், மறவர், மறத்தியர்

3. பறவை – பருந்து, கழுகு, எருவை, புறா

4. விலங்கு - வலிமை குன்றிய யானை, புலி, செந்நாய் முதலியவை.

5. ஊர் – பறந்தலை, குறும்பு.

6. நீர் நிலை - நீரற்ற சுனை, கூவல்.

7. பூக்கள் – குராம்பூ, மராம்பூ, பாதிரிப்பூ

8. மரங்கள் - உழிஞை, பாலை, ஓமை, இருப்பை, கள்ளி, சூரை

9. உணவு - வழிப்பறிப் பொருட்கள், ஊரிற் புகுந்து கொள்ளையடித்த பொருட்கள்

10. பறை – துடி, ஆறலைப் பறை, சூறைகோட் பறை, நிரை கோட்பறை

11. யாழ் – பாலையாழ்

12. பண் - பஞ்சுரம்

13. தொழில் - வழிப்பறி செய்தல், கொள்ளையடித்தல்

14. கொடி - கவலை

பாலைத்திணைக்குரிய நிலத்தை வறண்ட நிலம் எனவும் மறுபுலம் எனவும், செம்புலம் எனவும், வன்பால் எனவும் பண்டை நூலோர் பெயரிட்டிருக்கின்றனர். முல்லையும் குறிஞ்சியும் மழையின்றி வறண்டு போகுமாயின் அது வன்பாலை ஆகும். மருதமும் நெய்தலும் மழை இன்றி வறண்டு போகுமாயின் அது மென்பாலை ஆகும். மீண்டும் மழை பெய்யின் பழைய நிலங்கள் ஆகும் என்பர் உரையாசிரியர்கள்.

பாலைத்திணைக்குரிய ஒழுக்கமாக உரையாசிரியர்கள் கூறுவது உடன்போக்குப் பிரிவு, பொருள்வயிற் பிரிவு ஆகியனவாகும். இவ்வாறான பிரிவுக் காலங்களில் தலைமகனுக்குக் கூற்று நிகழும் இடங்கள் குறித்துத் தொல்காப்பியத்தில்ப் **“ஒன்றாத் தமரினும் பருவத்தும் சுரத்தும்” (தொல். பொருள். அகத். 44)** என்று தொடங்கும் நூற்பா வரையறுக்கின்றது. இந்நூற்பா உடன்போக்கு, பொருள் வயிற் பிரிவு, ஓதற் பிரிவு, தூதுவயின் பிரிவு, துணைவியின் பிரிவு, வினைவயின் பிரிவு, காவல் பிரிவு, பரத்தையர் பிரிவு ஆகப் பிரிவுகள் பற்றிய விளக்கங்களைக் கூறி, இப்பிரிவுகள் நிகழும் காலத்துத் தலைமகன் நிகழ்த்தும் கூற்று முறையை எடுத்துரைக்கின்றது. இவற்றுள் பரத்தையர் பிரிவு நீங்கலாக ஏனைய பிரிவுகளைப் பாலைத் திணைக்கண் அடக்குதல் வேண்டும் என்பது உரையாசிரியர் தம் கருத்துக்கள் ஆகும்.

அடுத்து தொல்காப்பியர் பாலைத்திணையோடு சேர்த்து வாகைத்திணையைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

“வாகை தானே பாலையது புறனே” (தொல். பொருள். புறத்.15)

என்னும் நூற்பா வாகையைப் பாலைத்திணையின் புறனாகக் குறிப்பிடுகின்றது. இதற்கு உரை எழுதும் இளம்பூரணர், “பாலையாவது தனக்கென ஒரு நிலமின்றி எல்லா நிலத்திலும் காலம் பற்றிப் பிறப்பது போல இதுவும் எல்லா நிலத்திலும் எல்லாக் குலத்திலும் காலம் பற்றி நிகழ்வது ஆதலினாலும் ஒத்தார் இருவர் புணர்ச்சியினின்றும் புகழ்ச்சி காரணமாகப் பிரியுமாறு போலத் தன்னொடு ஒத்தாரினின்றும் நீங்கிப் புகழப்படுதலானும் அதற்கிது புறனாயிற்று” என்று விளக்குகின்றார்.

பாலைத்திணையின் பொது இலக்கண மரபு, பாலையின் பெயர்க் காரணம், பாலைக்குரிய பெரும்பொழுது, சிறுபொழுது அப்பொழுதுகளின் பொருத்தப்பாடு, கருப்பொருள் மரபுகள், தொல்காப்பியர் நிலம் இல்லை என்று கூற உரையாசிரியர்கள் நிலம் உண்டு என்று கூறிய கருத்துகள், முல்லைக்கும்

குறிஞ்சிக்கும் இடைப்பட்ட பகுதியே பாலைக்குரிய நிலப்பகுதி என்ற கருத்து ஆகியவற்றைக் குறித்து மேற்குறிப்பிட்ட தரவுகளின் வழி அறிய முடிகின்றது.

1.4.1 கதை மாந்தர்கள்

தொல்காப்பியர் கவிதையில் கதை மாந்தர்கள் சித்தரிக்கப்படும் முறை குறித்துக் குறிப்பிட்டிருக்கின்றார்.

"மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்

சுட்டி ஒருவர் பெயர்க்கொளப் பெறாஅர்". (தொல். பொருள். அகத். 57)

என்ற நூற்பாவின் வழி அகப்பாடல்களில் இயற்பெயரைச் சுட்டிக் குறிப்பிடக் கூடாது என்று குறிப்பிடுவதன் மூலம் ஒரு பெரிய உண்மை இலக்கியப் பண்பு புலப்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்தக் கவிதையின் உண்மை உலகப் பொதுவானது (Universalism); அது குறிப்பிட்ட ஒருவருக்கு மட்டும் உரிய அனுபவம் இல்லை என்பதை இலக்கண மரபாகக் கொண்டது சங்க இலக்கியத்தின் சிறப்பு ஆகும்.

சங்க இலக்கியத்தில் இரண்டு நிலையில் பெயர் குறிப்பிடப்படலாம் என்று தொல்காப்பியர் கூறியதும் குறிப்பிடத்தக்கது.

"பெயரும் வினையும் என்று ஆயிரு வகைய

திணை தொறும் மரீஇய திணை நிலைப் பெயரே" (தொல். பொருள். அகத்.22)

என்று புதுமைப்படுத்திக் கூறியதோடு, அடுத்த நூற்பாவில் அவை ஆயர், வேட்டுவர் போன்ற பெயர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆயர், வேட்டுவர் போன்ற பெயர்கள், வாழும் நிலத்தை ஒட்டிய தொழில் அடிப்படையில் அமைந்த பெயர்கள், (மலைப்பகுதியில் வேட்டுவர், முல்லைப் பகுதியில் ஆயர், மருதப் பகுதியில் உழவர், நெய்தல் பகுதியில் பரதவர்) அவைகளை வினை அடிப்படையில் அமைந்தவை என்று குறிப்பிட முடியும். சங்க அக இலக்கியத்தில் பொதுவாகத் தலைவன் வெற்பன் (குறிஞ்சி நிலம்), நாடன் (முல்லை நிலம்), ஊரன் (மருத நிலம்), துறைவன் (நெய்தல் நிலம்) என்ற முறையில் குறிப்பிடப்படுகிறான். இப்பெயர்கள் ஒரு வகையில் பொதுப்பெயர் என்றாலும் மனிதனின் பண்பு அவன் செய்யும் தொழிலாலும், வாழும் இடத்தாலும் மாறுபடும். எனவே அந்தப் பெயர்களைக் கொண்டு அக்கதை மாந்தரின் பண்பை வாசகரால் உணர்ந்து கொள்ள முடியும் என்ற வகையில் பாடல்கள் பாடப்பட்டிருக்கின்றன. அதாவது, சுட்டி ஒருவர் கூறாதது அனைத்து உலகப் பொதுமை; அதில், தொழில், நாடு ஆகிய அடிப்படையில் பெயரைக் கூறுவது அந்த இரண்டின் அடிப்படையில் மனிதப் பண்பு சிறிது மாறுபடும் என்ற இன்னொரு உலகப் பொதுமை இதன் மூலம் புலப்படுத்தப்பட்டதாகக் கூறுவதற்கு இடமுண்டு.

"மைவரை நாட"(ஐங். 301), " நல்வரை நாடன்" (ஐங். 392)

"கொண்க!" (ஐங். 307)

இத்தொடர்கள் குறிஞ்சி, நெய்தல் நிலம் சார்ந்த தலைமகனைக் குறிக்கும் பெயர்கள் ஆகும். இவ்வகையில்,

“கொடுவில் எயினர்” (குறுந். 12)

“வயமான் தோன்றல்” (ஐங். 304)

“செறிகழல் நோன்றாள் மையணற் காளை” (ஐங். 389)

போன்ற தொடர்களையும் முன்வைக்க முடியும். தலைமகனது புறவாழ்வுச் சிறப்புகளும் இவ்வகைப்பாட்டில் பயின்று வந்திருக்கின்றன. பாலைத் திணைத் தலைவர்கள் விடலையராகவும் **(ஐங். 303, 310, 364, 373, 388, 393),** காளையராகவும் **(ஐங். 372, 374, 382, 385, 389, 390, 399, 400)** மட்டுமே சுட்டப்படுகின்றனர். ஏனைய பருவ நிலையினர் ஓதலாந்தையார் பாடிய பாடல்களில் இடம்பெறவில்லை.

தலைவியைக் குறித்து அடைமொழிச் செய்திகள் இப்புலவர் பாடிய பாடல்களில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் சில :

“பல்லிதழ் உண்கண் மடந்தை' (ஐங். 351)

“தெரியிழை யரிவை’. (ஐங். 354)

“திருந்திழை யரிவை’ (ஐங். 355, 482)

“மெல்லியல் அரிவை” (ஐங். 314)

“பேரியல் அரிவை”. (ஐங். 497)

“முள்ளெயிற் அரிவை” (ஐங். 495)

மெல்லியல், முள்ளெயிறு போன்ற அடைமொழிகள் இளம்பருவத்தைச் சுட்டுவன.

இப்பெண்டிரின் உருவ எழிலை வருணிக்கும் புலவர்கள் கூந்தல், பல், மொழி, தோள் போன்றவற்றை உயர்த்திக் குறிப்பிட்டு இருக்கின்றனர் **தேம்பாய் கூந்தல் (ஐங். 324,) அம்மெல்லோதி (ஐங். 368), அஞ்சிலோதி (ஐங். 391)** போன்ற சொல்லாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன.

“முத்துஏர் வெண்பல் முகிழ்நகை மடவரல்
தாயர்” (ஐங். 380)

முத்து போன்ற வெண்மையான பற்களையும், முகிழ்த்த நகையினையும் உடைய தாய் என்று நற்றாயைக் குறிப்பிடுகின்றார். தற்காலத்திலும் முத்து போன்ற பற்களையுடைய பிள்ளையின் அம்மா, மலர் போன்று சிரிக்கும் பெண்ணின் தாய் என்று அழைக்கும் வழக்கு உண்டு.

“அம்புஅமை வல்வில் விடலை தாயே!” (ஐங். 373)

“பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கே?” (ஐங். 399)

நற்றாய் தலைவனின் தாயைக் குறிப்பிடுவதற்குத் தலைவனின் பெயரோடு சேர்த்துப் பயன்படுத்திய தொடர். இன்றைய காலத்திலும் பெண்ணின் தாய், மருமகனது பெயரோடு இணைத்து அழைக்கப்படும் மரபு தொடர்கின்றது. சான்றாக, **கவினின் அம்மா, அகிலனின் அம்மா,**

“சேட்புலம் முன்னிய அசைநடை அந்தணிர்!” (ஐங். 374)

“அறம்புரி அருமறை நவின்ற நாவின்

திறம்புரி கொள்கை அந்தணிர்!” **(ஐங். 387)**

என்னும் தொடர்கள் அருமறைகள் ஓதும் அந்தணரைக் குறிக்கின்றன. இன்றைக்கும் அந்தணர்கள் மறை ஓதும் தொழிலை மேற்கொள்கின்றனர்.

கதை மாந்தர்களின் பெயர்களைத் திணைசார்ந்த முதல், கருப்பொருட்களோடு இணைத்து ஓதலாந்தையார் பாடல்கள் பாடியிருக்கின்றார்.

1.5 ஓதலாந்தையார்

ஓதலாந்தையார் என்பவர் குட்டநாட்டு, ஓதலூர் என்கின்ற ஊரினர். ஓதலூர் என்பது ஓதல் எனக் குறுக்கம் பெற்று ஓதலாந்தையார் என்னும் பெயர் பெற்றிருக்கக் கூடும். ஆந்தையார் என்ற பெயர் பலருக்கு இயற்பெயராய் அமைந்தமையை உரைகாரர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். தற்காலத்திலும் கொங்கு வேளாளரின மரபில் ‘ஆந்தை’ என்னும் குலக்கூட்டப் பெயர் இருப்பதை அறிய முடிகின்றது. தற்போது பாலக்காட்டுக்கு அருகில் ஓதலூர் என்னும் ஊர் இருக்கின்றது. இவர் பாடிய பாடல்கள் அனைத்தும் பாலைத்திணையில் அமைந்தமைக்கு இவருடைய ஊரின் அருகில் இருந்த பாலைப் பகுதிகள் காரணமாக இருந்திருக்கலாம்.

தலைமகனும் தலைமகளும் சுரவழியில் மேற்கொள்ளும் உடன்போக்கை அறவழிச் சார்பினது என்று இவரது பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

1.5.1 சமூகக் குழுக்கள்

கல்லாக் கோவலர் (ஐங். 304); கொண்க! (ஐங். 307); விடலை (ஐங்.303, 310, 364, 373, 388, 393); காளை (ஐங்.372, 374, 382, 385, 389, 390, 399, 400); எயினர் (ஐங்.363, 364); எயிற்றி (ஐங். 365); விழுத்தொடை மறவர் (ஐங். 352); மள்ளர் (ஐங். 371); மள்ளன் (ஐங். 383, 400); அந்தணிர் (ஐங். 374) ; அந்தணீர் (ஐங். 387) முதலியவை.

இப்பெயர்கள் அன்றைய தமிழ்ச் சமூகத்தை ஓதலாந்தையார் நன்கு அறிந்தவர் என்பதைப் புலப்படுத்துகின்றன. தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், அந்தணர், கண்டோர் கூற்றுக்களில் அமைந்த பாடல்களையும்; கொண்டுதலைக் கழிதல், பொருள்வயிற்பிரிதல் ஆகிய பாலைத்திணைப் பாடுபொருள்களை அடிப்படையாகக் கொண்டு பாடல்கள் பாடியுள்ளார்.

1.6 ஓதலாந்தையாரின் கவிதை மொழி

புலவர்கள் தான் வாழ்ந்த கால மொழியைக் கவிதையில் பயன்படுத்துவார்கள். அம்மொழியிலும் பழங்கால வழக்குகள் - தொல் வழக்குகள் இடம்பெறும்.

1.6.1 தொல் வழக்கு

வ.எண்	தொடர்	விகுதி
1.	இரந்தனென் மொழிவல் (ஐங். 384)	தன்மை வினைமுற்று
2.	தொழுவல் என்று ஒண்டொடி வினவும் (ஐங். 387)	தன்மை ஒருமை வினைமுற்று
3.	அரும்பொருள் வேட்கையம் (ஐங். 359)	தனித்தன்மைப் பன்மை
4.	சூழ்கம் (ஐங். 317), புணர்ந்து உறைதும் (ஐங். 333), கண்டனெம் மன்ற (ஐங். 390), ஆறுகம் - மடந்தையை (ஐங். 396)	தன்மைப் பன்மை வினைமுற்று
5.	பிரிந்து உறைதி (ஐங். 333),கொண்மோ, பெரும! (ஐங். 368), என்றிர், ஐய! (ஐங். 389)	முன்னிலை வினைமுற்று
6.	விரையா தீம் (ஐங். 365)	முன்னிலை ஏவல் வினைமுற்று
7.	குறுமகட் காட்டிய வம் மே (ஐங். 394)	முன்னிலைப் பன்மை வினைமுற்று
8.	யாவதும் வல்லா கொல்லோ (ஐங். 333)	அஃறிணை வினைமுற்று
9.	அறம் சாலியர் (ஐங். 312), இடும்பை எய்துக (ஐங். 373, இனிய ஆகுக (ஐங். 398)	வியங்கோள் வினைமுற்று
10.	செல்லல் ஐய! (ஐங். 332)	எதிர்மறை வியங்கோள் வினைமுற்று
11.	பரியல் வாழி, தோழி! (ஐங். 392)	அல் ஈற்று எதிர்மறை வியங்கோள் வினைமுற்று

ஓதலாந்தையார் பாடிய பாடல்களில் உள்ள தொல்வழக்குகள் (வினைமுற்று விகுதிகள்) கருத்து அழுத்தத்திற்காகப் பாடல்களில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை அறிய முடிகின்றது.

1.6.2 சமூக மொழியியல்

மொழி சமூகத்தை வெளிப்படுத்துகின்றது என்று குறிப்பிடுவது சமூக ஏற்றத்தாழ்வுகளைக் குறிப்பதாக இருக்கின்றது. சான்றாக, **உயர்சொற் கிளவி.** மொழி என்பது உரையாடும் இருவர், ஒருவர் பன்மையாலும், மற்றொருவர் ஒருமையாலும் குறிக்கப்படுவது சமூகத்தில் உயர்வு தாழ்வு இருப்பதன் நிலையை உணர்த்துகின்றது.

ஓதலாந்தையார் பாடிய பாடல்களில் தலைவன், தலைவியர்களைக் குறிக்கக் கையாண்ட பதிலீட்டுப் பெயர் மூலம் ஆண், பெண் சமூக நிலையில் மூன்று வகை இருந்ததை உணர்த்துகின்றன.

நீ நயந்து உறையப்பட்டோள்

யாவளோ? எம் மறையா தீமே. (ஐங். 370)

இவ்வடிகளில் தலைவி தலைவனை (நீ) நயந்து என்று குறிப்பிடுகிறாள். இது ஒத்த நிலையையும் உயர்வு தாழ்வு செய்யப்படாத நிலையையும் காட்டுகிறது. இதனைப் பழமையின் எச்சமாகக் கருதுவது ஒரு நிலை. தற்கால நிலையில் கிராமத்து அல்லது தொல்காப்பிய மொழியில் இழிந்தோர் சமூகநிலையைக் குறிப்பதாகக் கொள்வதற்கும் இடம் உண்டு.

நீள்இடை அருஞ்சுரம் என்ப-நம்

தோள்இடை முனிநர் சென்ற ஆறே. (ஐங். 314)

இவ்வடிகளில் தலைவி தலைவனைப் பன்மையாலும் (முனிநர்), தன்னைப் பன்மையாலும் (நம்) குறிப்பிடுகிறாள். இது ஒத்த நிலையானாலும் உயர் மட்ட வகுப்பார் ஒருவரை ஒருவர் பன்மைச் சொல்லால் குறிப்பிடுகின்றனர். **இனிய மன்ற தாமே (ஐங். 337)** இவ்வடியும் இவ்வுண்மையை உணர்த்துகின்றது**.** இதனைத் தொல்காப்பியர் மொழியில் ‘உயர்ந்தோர்’ மொழியாகக் குறிப்பிட முடியும்.

“**காடு இறந்தனரே காதலர்;**

‘நீடுவர் கொல்’ என நினையும், என் நெஞ்சே!” (ஐங். 311)

தலைவி தலைவனைப் பன்மையாலும் (நீடுவர்), தன்னை ஒருமையாலும் (என்) என்று குறிப்பிடுகின்றாள்.

“**வெம்முனை அருஞ்சுரும் நீந்தி நம்மொடு .... ஒழிந்தோள்” (ஐங். 329)** இவ்வடி தலைவன் தன்னை (நம்) பன்மையாலும், தலைவியை (ஒழிந்தோள்) ஒருமையாலும் குறிப்பிடுகின்றான். இது ஆண்கள் சமூக மதிப்பு அதிகம் பெற்றதன் நிலையை அறிய முடிகின்றது.

1.6.3 சொல்லாக்கம்

கவிதை ஒரு சொற்கலையாக்கம். அதன் ஒரு கூறு புதிய செல்லாக்கம் என்று குறிப்பிடலாம். சான்றாக,

கானவிருப்பை வேனில் வெண்பூ (குறுந். 329); ஞெலி கழை (ஐங். 307) (ஒன்றோடு ஒன்று உராய்கின்ற மூங்கில்);காழ் எறுழ் ஒள்வீ (ஐங். 308); கருங்கட் காக்கை (ஐக். 314); சிறுகண் யானை (ஐங். 327, 372); பரியல் கொண்ட பனிமலர் (ஐங். 315); முள்அரை இலவம் (ஐங். 320); வைகுசினை வான்பூ (ஐங். 331);சிறியிலை நெல்லி (ஐங். 334); இலைஇல மலர்ந்த ஓங்குநிலை இலவம் (ஐங். 338); சிறியிலைக் குறுஞ்சினை வேம்பின் நாறும்பழம் (ஐங். 339); திணி நிலைக் கோங்கம் (ஐக். 343); நறும்பூங் குறவம் (ஐங். 344); புதுப்பூ அதிரல் (ஐங்.345); அம்சினைப் பாதிரி …… செங்கண் இருங்குயில் (ஐங். 346); பொரிப் பூம் புன்கின் (ஐங். 347); வலம் சுரி மராஅம் (ஐங். 348); வேம்பின் ஒண்பூ (ஐங். 350); வேனிற் பாதிரி விரிமலர் (ஐங். 361); முறிஇணர்க்

கோங்கம் (ஐங். 366); பொரியயரைக் கோங்கின் (ஐங். 367);எரிப்பூ இலவத்து (ஐங். 368); வண்சினைக் கோங்கு (ஐங். 370); நீர் நசைக்கு ஊக்கிய உயவல் யானை (ஐங். 377); பைங்காய் நெல்லி (ஐங். 381); புன்கண் யானை (ஐங். 386).

1.6.4 சொல் இணை உறவு

கவிதை மொழி ஆய்வில் சொல் தேர்வும் சொல் இணைப்பும் (collocation) கவித்துவம், கவிதை உருவாக்கம் குறித்த உண்மைகளைப் புலப்படுத்துவன.

களிறு வழங்கு சிறுநெறி (குறுந். 329); குழலினும் இனைகுவள் (ஐங். 306); குயிற் பெடை இன்குரல் அகவ (ஐங். 341); சுரும்பு களித்து ஆளும் (ஐங். 342); செங்கண் இருங்குயில் அறையும் (ஐங். 346); பொறிப்பூப் புன்கின் புகர்நிழல் வரிக்கும் (ஐங். 368); மள்ளர் கொட்டின் மஞ்ஞை ஆலும் (ஐங். 371) போன்ற தொடர்கள் ஓதலாந்தையார் கவிதை ஆக்கத்திற்கு சொல் தேர்வு, சொல் இணை என்ற முறையில் பயன்படுத்தியிருக்கின்றார்.

1.6.5 தொடராக்கம்

ஓதலாந்தையார் பொருள் பொதிந்த, கவனத்தை ஈர்க்கக்கூடிய பல தொடர்களைக் கையாண்டுள்ளார்.

கானங் காரெனக் கூறினும் யானோ தேறேனவர் பொய்வழங் கலரே (குறுந். 21); புதுக்கலத் தன்ன கனிய ஆலம் (ஐங். 303); முருகு அமர் மாமலை பிரிந்தெனப் பிரிமே (ஐங். 308); இன்னா மன்ற, சுரமே; இனிய மன்ற, யான் ஒழிந்தோள் பண்பே! (ஐங். 326); இனிய கமழும் வெற்பின் இன்னாது என்ப, அவர் சென்ற ஆறே (ஐங். 331); பொருட்பிணி முற்றிய என்றூழ் நீடிய சுரன் இறந்தோரே (ஐங். 336); அழுங்குக செய்பொருட் செலவு (ஐங். 357); குறுங்கால் மகன்றில் அன்ன உடன்புணர் கொள்கைக் காதலோரே (ஐங். 381); அன்புஇல் அறனும் அருளிற்று மன்ற (ஐங். 394); 'நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும், எம்மனை வதுவை நல் மணம் கழிக' (ஐங். 399); 'காதல் புணர்ந்தனள் ஆகி, ஆய்கழல் வெஞ்சின விறல்வேற் காளையொடு இன்று புகுதரும்' என வந்தன்று தூதே (ஐங். 400) முதலியவை.

1.7 கவிதை மொழிக் கட்டமைப்பு

1.7.1 தொடரியல் அமைப்பும் பொருள் அழுத்தமும்

புறநிலைத் தொடரியல் அமைப்பும் சில செய்திகளுக்கு அழுத்தம் கொடுக்கிறது என்பதை மாற்றிலக்கண முறையில் செய்யப்படும் தொடரியல் ஆய்வு புலப்படுத்துகின்றது. சான்றாக,

புதுக்கலத் தன்ன கனிய ஆலம்

போகில்தனைத் தடுக்கும் <u>வேனில் அருஞ்சுரம்</u>

<u>தண்ணிய இனிய ஆக</u>

<u>எம்மோடும் சென்மோ , விடலை! நீயே.</u> (ஐங். 303)

என்ற ஓதலாந்தையாரின் இப்பாடல் அடியை, எம்மோடும் செல்லும் வேனில் அருஞ்சுரம் தண்ணிய இனிய ஆக என்று மொழிமாற்றாகப் பொருள் கொள்வதோடு பொருள்கோள் ஆய்வு நின்றுவிடும். அதன் புதைநிலைத் தொடர், வேனில்

அருஞ்சுரும் எம்மோடு சென்மோ நுமக்கு இனிய என்று கொள்ள வேண்டும். இனிய என்ற வினை இரண்டு தொழில் முதல் நிலைகளைக் கொண்ட வினை. புதைநிலைத் தொடரில் பயனிலை முன்னிறுத்தம் செய்யப்பட்டு நாலாம் வேற்றுமைத் தொகையை ஓதலாந்தையார் பயன்படுத்தியிருக்கின்றார்.

இப்பாடலில் புலவரால் பயன்படுத்திய நாலாம் வேற்றுமைத்தொகை தலைவியின் தன்முனைப்பு இல்லாத நிலை அல்லது தலைவி வெட்கம் கருதி இருந்ததைப் புலப்படுத்துகிறது. மேலும் கேட்பவனும் அல்லது வாசகனும் எளிதில் ஊகிக்கக் கூடியது என்று இரண்டு அடிகளில் சுர வழியை வருணித்து, 'சுர வழியும் இனிய' என்று பயனிலையை முன்னிறுத்திக் கூறியதால் முரண் வலியுறுத்தப்பட்டு தலைவி தன்னுடைய கருத்தை வலுவாகக் கூறியதாகவும் பொருள் கொள்ள முடியும். அதுதான் பயனிலை முன்னிறுத்தத்தின் பயன். இந்நிலையில் **வேனில் அருஞ்சுரும் தண்ணிய இனிய ஆக** என்று கூறியவுடன் கேட்பவருக்கும் அல்லது வாசகருக்கும் அடுத்து புலவர் என்ன கூறப் போகிறாரோ என்று அறியும் ஆர்வம் உண்டாகும். இதை மேலைநாட்டு இலக்கிய ஆய்வில் இறுக்கம் (Tension) உண்டாகிப் பின்னர் தீர்த்தல் (Release) என்று குறிப்பிடுவார்கள்.

1.8 பா அமைப்பு

யாப்புக்கும் பொருளுக்கும் தொடர்பு உண்டு. அது போன்று அடிக்கும் மொழி அமைப்புக்கும் பொருளுக்கும் உறவு உண்டு. இவையே கவிதைக்கு யாப்பு இன்றிமையாதது என்ற கருத்துக்கு வலுச்சேர்ப்பதாக இருக்கின்றது.

ஓதலாந்தையார் பாடிய அகத்திணைப் பாடல்கள் அனைத்தும் **ஆசிரியப்பா** வகையைச் சார்ந்தவை.

1.9. யாப்பு வடிவம்

வ.எண்	**பாடல் எண்**	**பாவகை**
1.	ஐங். 341- 350	மூன்றடி ஆசிரியப்பா
2.	ஐங். 300 – 303, 305 – 308, 310 - 312, 315 - 317, 319, 323, 325, 328, 336, 337, 339, 340, 353, 354, 356, 358, 363, 364, 370, 372, 374, 377, 379, 386, 390	நாலடி ஆசிரியப்பா
3.	குறு. 21 ஐங். 304, 309, 313, 314, 316, 318, 320 - 322, 324, 326, 327, 329, 330, 331-335, 338, 351, 352, 355, 357, 359-362, 365 - 369, 371, 373, 375, 376, 378, 380 - 382, 384, 388, 389, 392 – 394, 396- 399.	ஐந்தடி ஆசிரியப்பா
4.	குறு. 12 ஐங். 306, 314, 325, 332, 333, 334, 336, 347, 348, 352, 353, 359, 361, 363, 365, 375, 376, 382, 383, 386, 393, 394.	ஆறடி ஆசிரியப்பா
5.	குறு. 329	ஏழடி ஆசிரியப்பா

இவ்வாசிரியப்பா வகையைச் சார்ந்த பாடல்கள் அனைத்தும் ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீர்களாய் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. இப்பாடல்களின் யாப்பு பேதத்தை அடையாளம் காண முடியும். யாப்பு பேதத்தை ஆராய ஒரு கவிதையின் ஒரு வடிவத்தை அடிப்படை வடிவாகக் கொண்டு, அதனுடைய மொழி அமைப்பும் யாப்பு அமைப்பும் இணைகிற முறையை அறிந்து கொண்டு பின்னர் மாற்றுப்பாவின் சீரமைப்பையும் அடியமைப்பையும் மொழியமைப்பு அடிப்படையாக ஆராய்ந்து மாறுபாட்டுக்கான காரணத்தையும் கண்டறிய முடியும்.

1.10 முடிவுரை

கவிதை மொழியில் மொழி, யாப்பு, பா ஆகிய மூன்றின் அமைப்பையும் கவனிக்கும்போதுதான் பொருள் வீச்சைப் புரிந்து கொண்டு, கவிஞனின் முழு உள்ளத்தையும் அறிந்து கொள்ள முடியும். மொழியமைப்பின் முக்கியத்துவம் சமீப காலமாகத்தான் வற்புறுத்தப்பட்டு வருகிறது. **(அகத்தியலிங்கம்,ச., கவிதை உருவாக்கம், 1998)** இவற்றோடு யாப்பு அமைப்பும், பா அமைப்பும் இணையான முக்கியத்துவம் உடையவை என்பது குறிப்பிடத்தக்கது. இவை எல்லாம் சொற்பொருளையும் தொடர் பொருளையையும் தாண்டிக் குறிப்புப் பொருளை உணர்த்தும் கருவிகளாக அமைகின்றமையை இவ்வாய்வுக் கட்டுரையின் வழி அறிய முடிகின்றது.

துணை நின்ற நூல்கள்

1. அகத்தியலிங்கம், ச. (1998) கவிதை உருவாக்கம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. சண்முகம், செ.வை. (2013), கவிதைக் கட்டமைப்பு, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை.
3. சரவணன்,ப. (பதிப்பும் உரையும்), (2008) சிலப்பதிகாரம், சந்தியா பதிப்பகம், சென்னை.
4. சாமிநாதையர், உ.வே. (உரை). (2009). குறுந்தொகை மூலமும் உரையும், உ.வே.சா நூல் நிலையம், சென்னை.
5. துரைசாமிப் பிள்ளை, ஔவை. சு., (1938), ஐங்குறுநூறு மூலமும் விளக்க உரையும், ஸ்ரீ லட்சுமி பிரஸ், திருவத்திபுரம்.
6. பாலசுந்தரம், ச. (உ.ஆ.), (2012), தொல்காப்பியம், பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.

இணையதளம்

1. பாண்டியராஜா, பா. (14.06.2014), தொல்காப்பியம் – தொடரடைவு, தமிழ் இலக்கியத் தொடரடைவு, http://tamil concordance.in|tholConc - Kaa1.html.
2. .... தமிழ் இணையக் கல்விக் கழகம் https: //tamilvu.org/.

குறிப்பு : தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். இந்திய திராவிட மொழியியல சங்கம் & பன்னாட்டுத் திராவிட மொழியியலாளர் பள்ளி, திருவனந்தபுரம். இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் மைசூரு இணைந்து நடத்திய மொழியியல், இலக்கியம், ஒப்பிலக்கியம், மொழிபெயர்ப்பு இவற்றின் சமகால ஆய்வுப் போக்குகள் என்ற தலைப்பில் நடைபெற்ற மாநாட்டில் வாசித்து உரையாடப்பட்ட கட்டுரை.